**அசல் வழக்கு எண். 136/2020** **தேதி- 04.07.2025**

**பி.வா.சா.1 - சரண்யாதேவி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்களை தனித்தனியாக பிரித்து அடையாளம் காண்பதற்கு சர்வேயர் வைத்து அளந்து பார்த்தோமா என்றால் இல்லை. சர்வேயர் படி கட்டியுள்ளோம். சர்வேயர் படி கட்டியத்திற்கான இரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ.2 ஆவணம் முத்துவீரன் எழுதி கொடுத்த உறுதி மொழி பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எழுதப்பட்ட போது நான் பிரதிவாதி சங்கத்தில் நான் அலுவலராக இல்லை. அலுவலக கோப்பில் மேற்படி ஆவணம் இருந்தது. பி.சா.ஆ.2 ஆவணம் எதற்காக ஏற்பட்டது என்றால் மேற்படி முத்துவீரன் சங்கத்தின் சொத்தான சுமார் 5 சென்ட் நிலத்தை அனுபவம் செய்து வந்தததின் அடிப்படையில் அதில் வாதி பாதி சென்ட் நிலத்தை தன்னிடம் விற்பனை செய்ய கோரி கேட்டதற்காக ஏற்பட்ட ஆவணம் ஆகும்.

2. மேற்படி பி.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பிரதிவாதி சங்கத்தால் அவருக்கு அனுப்பப்ட்ட தபாலின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பி.சா.ஆ.2 ஆவணம் பிரதிவாதி சங்கத்தின் அப்போது இருந்த செயலாளரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை பின்னிட்டு முத்துவீரனிடம் பணம் ஏதும் பெறப்பட்டதா என்றால் இல்லை. பி.சா-ஆ.2 ஆவணத்தின் தேதி 05.09.2013 ஆகும். மேற்படி தேதியில் சங்கத்தின் அப்போதைய செயலாளர் ரூ.70000/- முத்துவீரனிடமிருந்து வாங்கியுள்ளதாக இரசீது உள்ளது என்றால் சரிதான்.

3. அதன் அடிக்கட்டை ஆவணம் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. மேற்படி இரசீதுக்களில் மனை கிரைய அனாமத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. அனாமத்து என்றால் இனாமாக வழங்கப்பட்டதா என்றால் இல்லை. தாவா பி பட்டியல் சொத்தை பொறுத்து வாதியிடமிருந்து சுவாதினத்தை மிட்க ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் நாங்கள் ஒவ்வொரு முறை போகும் போதும் வாதி பிரச்சனை செய்து வந்தார். தாவா பி பட்டியல் சொத்தை 2020 ம் வருடத்திலும், தற்போதும் வாதி தான் ஆக்கிரமித்து அனுபவம் செய் து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் தாவா அ மற்றும் ஆ பட்டியல்

சொத்துக்களை பொறுத்து ஒரே டவுன் சர்வே எண் குறிப்பிட்டு வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான்.

4. குளித்தலை நகராட்சியல் வழங்கப்பட்ட அடங்கல் பதிவேடான வா.சா.ஆ.4 ஆவணத்திலும் தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்களை பொறுத்து 1ம் வாதி பெயரில் அடங்கல் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி வா.சாஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் தவறாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி ஏற்பட்ட தவறுகளை பொறுத்து நகராட்சியரிடம் நடவடிக்கை ஏதும் எங்கள் தரப்பில் எடுக்கப்பட்டதா என்றால் நடவடிக்கை எடுத்துள்ளோம். நாங்கள் நடவடிக்கை எடுத்தற்காக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா அ பட்டியல் சொத்திற்கு மேற்கே உள்ள சொத்துக்கள் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா பி பட்டியல் சொத்து பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

5. தாவா பி பட்டியல் சொத்தில் உரிமை கோருவதற்கு எவ்வகையிலும் எங்களுக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை அளப்பதற்கு வாதிகளுக்கு முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் நிலத்தை அளப்பதற்கு முன்அறிவிப்பு கொடுக்க தேவையில்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது தாவா சொத்தில் மரம், முள், செடி, கொடி போன்றவை இருந்தது என்றால் சரிதான். மேற்படி மரம், முள், செடி, கொடி ஆகியவற்றை அகற்றுவதற்கு ஆட்களை அழைத்து வந்தோமா என்றால் அழைத்து வந்தோம். மேற்படி ஆட்களை அழைத்து சென்ற போது சர்வேயர் உடன் இல்லை என்றால் அப்போது நான் அலுவலராக இல்லை.

6. அலுவலக கோப்புகளில் கோபிநாத் சர்வேயர் வந்ததாகவும் அளவீடு செய்ததில் பிரச்சனை ஏற்பட்டதால் அளவீடு செய்யப்படாமல் அவர் திரும்பி சென்றதாகவும் காணப்பட்டதின் அடிப்படையில் மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தில் உள்ள செடி, கொடிகளை அகற்ற வேண்டி அருவாளுடன் ஆட்களை அனுப்பியதின் பேரில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் எங்கள் நிலத்தை நாங்கள் சுத்தம் செய்ய ஆட்களை அனுப்பினோம். மேற்படி காவல் நிலையத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால்

உரிமையியல் பிரச்சனையாக உள்ளதால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு முடித்து வைக்கப்பட்டதாக கோப்பின் அடிப்படையில் தெரியவந்தது.

7. வாதிகளுக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் தாவா சொத்துக்களை பொறுத்து அது சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்று கூறி எதிர் கோருரிமை ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 1978 லிருந்து தாவா சொத்துக்களை வாதி மற்றும் அவரது குடும்பத்தினர் அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா பி பட்டியல் சொத்தை பொறுத்து சங்கத்திற்கு உரிமை மூலம் இல்லை என்றும் அதனால் தான் இன்று வரை நடவடிக்கை சங்கத்தால் ஏதும் எடுக்கப்படாமல் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

8. தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்கள் தனித்தனியாக அடையாளம் காண்பிக்க முடியாதவாறு ஒரு சேராக உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும், வாதியின் அனுபவத்திற்கு நாங்கள் இடையூறு செய்கிறோம் என்றும், அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. தாவா ஆ பட்டியல் சொத்து சங்கத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**